மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்து அந்த அவசர சிகிச்சைப் பிரிவை உடனடியாகத் திறக்க ஏற்பாடு செய்யும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 129, மாண்புமிகு உறுப்பினர் திரு. சோழன் சித. பழனிச்சாமி, மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

129—

சொந்தக் கட்டடம்

***1163—திரு. சோழன் சித. பழனிச்சாமி:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, காரைக்குடியில் உள்ள பிற்படுத்தப்பட்ட மாணவர்களின் விடுதிக்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கின்றேன்.*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், வாடகைக் கட்டடங்களில் செயல்படும் அனைத்து விடுதிகளுக்கும் சொந்தக் கட்டடம் கட்ட ஆணையிட்டுள்ளார்கள்.

தற்போது தனியார் கட்டடங்களில் இயங்கும் 148 விடுதிகள் அனைத்திற்கும் 115.12 கோடி ரூபாய் செலவில் சொந்தக் கட்டடம்

2012 ஏப்ரல் 19]

கட்டுவதற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் உத்தேசிக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) முதல்கட்டமாக 84 விடுதிகள் 64.48 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ளன. இதற்காக 2012—2013 ஆம் ஆண்டு வரவு—செலவுத் திட்ட மதிப்பீட்டில் 40.58 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அவற்றில், காரைக்குடி பிற்படுத்தப்பட்டோர் கல்லூரி மாணவர் விடுதியும் அடங்கும். இவ்விடுதிக்கு நிலம் தேர்வு செய்யப்பட்டு பொதுப் பணித் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. விரைவில் ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டு, 63.86 இலட்சம் ரூபாய் செலவில் இவ்விடுதிக்கான கட்டுமானப் பணிகள் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசால் தொடங்கப்படும் என மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சோழன் சித. பழனிச்சாமி.*

திரு. சோழன் சித. பழனிச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேட்காமலே கொடுத்துக்கொண்டிருக்கக்கூடிய தமிழகத்தினுடைய முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களிடத்தில் கோரிக்கை வைத்தவுடன் அது நிறைவேற்றித் தரப்படும் என்று சொல்லியதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் தங்கள் வாயிலாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தேவகோட்டையில் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதி இல்லை. அங்கே புதிதாக மாணவர் விடுதி அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேட்டதையும் கொடுத்து, கேட்காததையும் கொடுக்கும் நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்களுடைய கனிவான கவனத்திற்கு எடுத்துச் சென்று பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.